22.02.2024

MC.7/2022

PW-1, உஷா

**எதிர் மனுதாரர் தரப்பில் கு.வி**

எனக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 25.02.2021 அன்று ராமஜெயம் மகாலில் வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். திருமணத்திற்கு போட்ட நகைகள் அனைத்தும் எங்களது பீரோவில் தான் வைத்திருந்தேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் ஆன பீரோவில் வைத்திருந்தேன். பீரோவிற்கான சாவி என்னிடம் உள்ளது என்றால் பீரோவில் தான் இருக்கும். திருமணம் முடிந்து 15 நாட்களில் நான் எதிர்மனுதாரரிடம் 15 பவுன் நகையை கொடுத்த போது அவரும் நானும் என்னுடைய பெற்றோர்களும் என்னுடைய தாய் மாமா கோபாலும் இருந்தோம். நிரூபண வாக்குமூலத்தில் மேற்படி நகைகளை எனது அப்பா சிதம்பரம் எனது அம்மா ஜெயலட்சுமி மற்றும் எனது மாமா கோபால் ஆகியோர்கள் முன்னிலையில் கொடுத்திருந்தேன் என்று சொன்னால் சரிதான். எனது மனுவில் எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் செய்த வன்கொடுமைகள் என்ன குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கும் அவரது அண்ணன் மனைவிக்கும் தவறான உறவு இருந்ததை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நேரில் பார்த்ததால் தான் பிரச்சினை. தவறான உறவு என்பது பேசிக் கொண்டு இருந்ததை பார்த்தேனா என்றால் இல்லை. தவறாக இருந்ததை தான் பார்த்தேன். இரவு நேரம் என்பதால் மாட்டுக் கொட்டகத்தில் வெளிச்சம் இல்லாது என்பது சரிதான். நான் பக்கத்தில் இருந்து பார்த்ததால் எனக்கு தெரியும். இது சம்பந்தமாக 05.03.2022 ல் நடந்ததற்கு 06.03.2022 ல் காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரில் நான் எனது நகைகளை மீட்டு தருவதற்கு வேண்டி மட்டும் தான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. அனைத்து சம்பவங்களையும் சொல்லி தான் சொல்லியுள்ளேன். எங்கள் இருவருக்கும் குழந்தை இல்லை. 6 மாதத்திலேயே பிறந்து இறந்துவிட்டது. அதற்கான மருத்துவ சிகிச்சை வேலம்மாள் மருத்துவமனையில் பார்த்தேன். அதற்கான செலவுகள் அனைத்தும் எனது கணவரின் இன்சூரன்ஸ் மூலமாக தான் பார்த்தேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் அரசு வேலை பார்த்து ஓய்வு பெற்று தற்போது பென்சன் வாங்கி கொண்டிருக்கிறார் என்றால் சரிதான். நான் என்னுடைய தாய் தகப்பனாரின் வீட்டில் குடியிருக்கும் வீடு சொந்த வீடு என்றால் சரிதான். எனது ஊரில் பாளையம்பட்டியில் எனது பெயரில் சொந்தமாக வீட்டடி மனையிடம் 700 சதுர அடிகள் உள்ள இடம். நான் திருமணத்திற்கு முன்பு தனியார் ஐ.டி நிறுவனத்தில் பணி புரிந்து வந்தேன். தற்போது மேற்படி நிறுவனத்தில் வீட்டில் இருந்தே பணியாற்றும் ஊழியராக பணிபுரிகிறேன் என்றால் இல்லை. தற்போது நான் எந்த வேலையும் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான்

டிப்ளமோ எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேசன் படித்துள்ளேன் என்றால் சரிதான். நான் படித்த படிப்புக்கு தற்போது வேலைக்கு சென்றால் ஒரு கணிசமாக தொகை சம்பளமாக கிடைக்கும் என்றால் தற்போது எந்த நிறுவனத்திலும் வேலை கிடைக்கவில்லை. தற்போது என் தகப்பனார் தனியார் நகைக்கடையில் பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். மாதம் ரூ.20,000/- கிடைக்கும் என்றால் இல்லை. 10,000 தான் சம்பளம். அதே போல் என் தகப்பனார் பென்சனாக ரூ.15,000/- வாங்குவார் என்றால் சரிதான். விவசாயத்தின் மூலம் வருடம் ரூ.2,00,000/- வருமானம் கிடைக்கும் என்றால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்றால் தற்போது இல்லை. நான் தனியார் நிறுவனத்தில் பணியாற்றி போதுமான சம்பளம் பெற்று வருகிறேன் என்றும் வழக்கிற்காக வேலையில் இல்லையென சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அருப்புக்கோட்டை மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுத்து பண்டபாத்திரங்கள், கட்டில் மற்றும் பீரோவை எடுத்துச் சென்றேன் என்றால் சரிதான். அப்போது பீரோவில் உள்ள நகையையும் கொண்டு சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் பரிகாரம் கிடைக்கதக்க அல்ல என்றால் சரியல்ல.